# பெரும் ஆபத்துமிக்க 28 மரங்கள் விரைவில் வெட்டப்படவுள்ளன



பெட்டாலிங்ஜெயா, மே 11-

கடந்த செவ்வாய்க்கிழமை நிகழ்ந்த ஒரு சம்பவத்தை தொடர்ந்து பெரும் ஆபத்துமிக்கவை என 28 மரங்களை அடையாளம் கண்டுள்ள கோலாலம்பூர் மாநகர் மன்றம் (டி.பி.கே.எல்.) அந்த மரங்களை வெட்டவும் திட்டமிட்டுள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை ஜாலான் சுல்தான் இஸ்மாயிலில் ஒரு பெரிய மரம் வேரோடு சாய்ந்ததில் ஒருவர் உயிரிழந்ததுடன் மேலும் இருவர் காயமடைந்தனர்.

மரங்கள் பராமரிப்பில் அனுபவம் வாய்ந்த டி.பி.கே.எல். அதிகாரிகள் 30 ஆண்டுகளுக்கும் மேற்பட்ட மரங்களையும் 2019 லிருந்து கோலாலம்பூரை 1.5 மீட்டர் சுற்றுளவுக்கு வேர்களை கொண்டிருக்கும் மரங்களையும் பார்வையிட்டிருப்பதாக டி.பி.கே.எல். ஓர் அறிக்கையில் கூறிற்று.

இதுவரை 175 மரங்கள் பெரும் ஆபத்துமிக்கவையாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. இவற்றில் பெரும்பாலானவை 50 ஆண்டுகளுக்கும் மேற்பட்டவை. இவற்றில் 147 மரங்கள் வெட்டப்பட்டு விட்டன என்று அந்த அறிக்கை குறிப்பிட்டது.

வழக்கமான சோதனை நடவடிக்கைகளின் போது விரைவில் வெட்டித் தள்ளப்பட வேண்டிய 28 மரங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

